www.padippakam.com

தமிழனின் கல்வித் தாரகை...
சரிந்தது....
தேசம் விழுமிய திரவியம்...
மறைந்தது....

# பார்வை
# PARVAI

NOVEMBRE
கார்த்திகை
NOVEMBER
1989

படிப்பகம்

www.padippakam.com

தரம்... மலிவு...

# இந்திய இலங்கை சமையல் உணவுப் பொருட்கள்

# இந்தி தமிழ் வீடியோ படங்கள்

மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள...

# மார்ச்சே ராஜ்

Rajh Ent. 276 9262

444 Jean Talon W. Montreal
Quebec. H3N 1P9

படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் ஒளி
வெளியீடு

ஆசிரியர்:
தமிழ்ப்பிரியா

வடிவமைப்பு:
தமிழ்ப்பிரியா

தட்டச்சு:
யோகன்

# பார்வை
PARVAI

THAMILAR OLLI ASSOCIATION INC
1225 ST. MARC, SUITE 206
MONTRÉAL, QUÉ. H3H 2E7

படிப்பகம்

www.padippakam.com

# பார்வைகள்....

## ராஜினி திரணகம

ஒரு சிங்களத் திருமகனை மணம் செய்தபோதும்
தன் சொந்த மண்ணை நினைத்தாள் -

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழி இருந்தபோதும்
தன் மக்களை - தமிழ் மக்களை நேசித்தாள் -

போராடும் தன் இனத்துக்கு மருத்துவப் பணி ஒரு
புனிதப் பணி எனக் கண்டாள் -

சார்ந்து போக இருந்த யாழ் மருத்துவ பீடத்திற்கு
தூணாக நின்றாள் -

உண்மை பேசுவதால் மட்டும் எனக்கு அழிவு எனில்

அந்த அழிவு எழுதப்படட்டும் என்றாள் -

ஆம் தன்னைக் கொடுத்த அந்தத் தமிழ் மாது
ரஜனி - தமிழ் மண்ணில் - தமிழ் ஈழத்தில்
மரணம் கண்டாள் -

ஏன் ------ ?
இனத்துக்காக எடுக்கப்பட்ட துவக்குகளின்

இழுபறிச் சாதனை இது -



படிப்பகம்

www.padippakam.com

# ராஜினி திரணகம மரணம்;

## மக்களுக்கும் மாணவருக்கும் பெரும் தாக்கம்

முகப்பு அட்டையில்: ராஜினி திரணகம.

வைத்தியக் கலாநிதி ராஜினி திரணகமவின் அகால மரணம் குறித்து யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுவதாவது:

"காலஞ்சென்ற கலாநிதி திரணகம அவர்கள், மருத்துவ பீடத்தில் உடற்கூற்றியல் துறையை, ஏறத்தாழ தனியொருவராகவே சிறப்புடன் நடாத்திவந்துள்ளார். இவரது மரணம் ஏற்கனவே பலவீனப்பட்டுள்ள எமது பல்கலைக்கழக மருத்துவபீடம் தொடர்ந்து சரிவர இயங்குவதற்குப், பாதகமாக அமைந்துள்ளது. இந்தக் கொடூரக் கொலை பற்றி, மூதவை தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், யாழ். பல்கலைக்கழகம் 29-9-89 வெள்ளியன்றுவரை தொடர்ந்து துக்க நிலையை அனுட்டிக்கும் என்றும் தீர்மானித்துள்ளது."

இதுபற்றி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை கூறுவதாவது:

திருமதி ராஜினி திரணகமவின் மரணம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு மட்டுமன்றி, முழுத் தமிழ்பேசும் சமூகத்துக்கும் ஒரு பாரிய இழப்பாகும். உண்மையான சமூகப்பிரக்ஞை கொண்ட இவர், 1987 ஒக்ரோபர் இராணுவ நடவடிக்கையின் பிறகு பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதற்கு முக்கிய பங்காற்றியவர். மேலும், பல்கலைக்கழக மட்டத்தில் மனித உரிமைக்கான பணிகளை முடுக்கிவிட்டதோடு, இவர் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கொடுக்க தகவல்கள் 'சர்வதேச விழிப்புச் சபை', 'மன்னிப்புச் சபை' போன்றவற்றின் கௌரவ அங்கீகாரத்தையும் பெற்றன.

புதிய இந்தியப் பிரதமர் வி. பி. சிங் அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

பார்வையின்...

# அழைப்பு...

அன்பர்களே...!
என் "பார்வைகள்"
ஒரு இயக்கத்தின் அல்லது
இயக்கங்களின் பிறப்பிடமல்ல
என் இனத்தின் பிறப்பிடம்....
இனம் ஒரு இயக்கமாகவேணும் எனும்
இதயத்தின் பிறப்பிடம்..!
களைத்துப் போன இதயங்களோடு..
கடலைக் கடந்தோம்... ஆயின்
கனடாவில் நாம்..?
அந்தக் கதைகளோ கனடா
வரவு வைக்கிறது...
வளைபோட வழிநடக்க
பழகப்படுகிறோம்...

ஆசனமும் தமிழும் இருப்பது..
கனடாத் தெருக்களுக்கும் தெரிகிறது...
சண்டைகள் சட்டமன்றத்தில்
நிற்கின்றன....
கொலைகள் கத்தி, துவக்கு, விஷம் என்று
நிறம் மாறுகின்றன...



படிப்பகம்

எங்கள் நாட்டுப் போர்...
என்ன சொல்கிறது..?
சகோதரக் கொலைகளின்
சவங்கள் நிறைக்கின்றன...
தமிழனை தமிழன் கொல்ல...
எசமானர்கள் தேடிக்கொண்டோம்
நாம் அழிய...
நாமே துவக்குகளோடு திரிகிறோம்..
ஆமாம் அன்பரீர்..
என் "பார்வைகள்"
கொடுமைகள் சுமக்கும்
கொடுமைகள் மறைந்து...
விடிவுகள் சுமக்கும்
விடிவெள்ளிகளைத் தேடுகிறது...
சொல்லும் திறமுடையோர்..
சொல்லுங்கள்...
எழுதும் பணியுடையோர்...
எழுதுங்கள்...
என் எழுத்துக்கள் ஒவ்வொன்றும்
தமிழ்ஈழத்தின் இரத்தமண்துகள்....
என்முகவரி உங்களைத்......
தேடுகிறது...!

# எஸ்.எம்.கோபாலரத்தினம் யார்?

யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த எஸ்.எம். கோபாலரத்தினம், ஈழ மக்களிடையே மதிப்புபெற்ற பத்திரிகையாளர். 'எஸ்.எம்.ஜி.' என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள், 'ஸ்ரீரங்கன்' என்ற பெயரில் சிறுகதைகள், 'கோபு' என்ற பெயரில பொதுக் கட்டுரைகள், 'ஊர்சுற்றி' என்ற பெயரில் சிந்தனைக் கட்டுரைகள் எழுதி வருபவர் இவர்.

விரகேசரியில் பத்திரிகையாளராக ஆரம்பித்து, 'ஈழநாடு' இதழில் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். இவருடைய 'தெய்வப்பூ' என்ற கதை வாசகர்களிடையே பிரபலமானது.

இவருடைய ஈழமுரசு பத்திரிகை அலுவலகம் இந்திய அமைதிப்படையினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதை அடுத்து நின்றுபோனது. எஸ்.எம்.ஜி., அமைதிப் படையினரால் கைதாகி 72 நாட்கள் சிறைவாசத்தில்! (அப்போது அவர் பார்த்தவை – கேட்டவற்றையே கட்டுரையாக எழுதுகிறார் ஜூ.வி-யில்!)

சமீபத்தில் கோபாலரத்தினமும் அவர் மனைவியும் தமிழகம் வந்து திருப்பதி உட்பட எல்லாக் கோயில்களுக்கும் சென்று பிரார்த்தனை செய்தனர்.

"ஈழத்துக்கு அமைதிப்படை வந்த நோக்கம் நிறைவேறவில்லை... ஒரு இயக்கத்தை மட்டும் அழிக்க வேண்டிய அவசியமே இல்லை... யாழ் பூமியில் அமைதி தேவை என்பதே எல்லோருடைய விருப்பமும்! சிங்கள அரசின் அடக்குமுறை தாங்காமல் ஆயுதம் ஏந்தினார்கள் தமிழ் இளைஞர்கள்! தாய்மார்களும் அவர்களை வாழ்த்தினார்கள். ஆனால், அந்தப் போராட்டம் திசைமாறிச் சொந்த ஆட்களை அழிக்கும் அளவுக்கு மாறிவிட்டது! இதனால் ஈழ மக்கள் தாங்க முடியாத துக்கம் அடைந்தார்கள்... ஆனாலும் எல்.டி.டி.ஈ. இல்லாமல் ஈழத்தில் அமைதி கொண்டு வரமுடியாது..."

இப்படிச் சொன்னார் எஸ்.எம்.ஜி.!

www.padippakam.com

# ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை!

ஈழப் பத்திரிகையாளர்
ஸ்.எம். கோபால்ரத்தினம்

கடந்த 1987-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம் தேதி சனிக்கிழமை அதிகாலை ஐந்து மணி... யாழ்ப்பாண நகரில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு குண்டுகள் வெடித்தன. குண்டு வெடிக்கும் ஒலி சில மாதங்களாக ஓய்ந்திருந்த சமயத்தில் இந்தக் குண்டுகள் வெடித்த ஓசை நகரைக் கலக்கிவிட்டது. 'ஈழமுரசு' பத்திரிகை அலுவலகத்தில் குண்டு வெடித்ததாகத் தகவல் எட்டியதும், நான் அங்கு விரைந்தேன். உலகில் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், மனித உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும், பத்திரிகைச் சுதந்திரத்துக்காகவும் குரல் கொடுக்கும் ஆசியாவின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் . இந்தியாவிலிருந்து ஈழத்தில் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும், அமைதியை நிலைநாட்டவும் டெல்லி அனுப்பியிருந்த இந்திய அமைதிப்படையின் ஒரு பிரிவினர் 'ஈழமுரசு' பத்திரிகையின் அச்சு யந்திரத்தையும், அச்சகப் பகுதியையும் குண்டுவைத்துத் தகர்த்திருந்தனர். இரண்டாவது குண்டு 'முரசொலி' பத்திரிகையின் அச்சு யந்திரத்தைத் தகர்த்திருந்தது.

1987-ம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி புதன்கிழமை அதிகாலை ஆறு மணிகூட ஆகவில்லை...

எனது வீட்டு வாசலில் ஒரு வாகனம் நிறுத்தப்படும் ஓசை கேட்டது.

முன்னறையில் நான் கண்களை மூடிப் படுக்கையிலிருந்தபோதும் வழமைபோல் பழைய சம்பவங்களை இரைமீட்டும், அடுத்துச் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்துக்கொண்டும் கிடந்தேன்.

வாகனம் ஒன்று வந்து வாசலில் நின்ற ஓசை கேட்டதும், ஊரடங்கு நேரம் தளர்த்தப்படுவதற்கு இன்னும் சிறிது நேரம் இருப்பதையும் பொருட்படுத்தாமல் எனது மனைவி தெருக்கதவைத் திறந்தாள்.

இந்திய அமைதிப்படையின் ஜீப் வண்டியொன்று நின்றிருந்தது. முன்னறைக் கதவைச் சற்று விலக்கிப் படுக்கையிலிருந்தபடியே நானும் அதைப் பார்த்தேன்.

"இந்திய ஆமிக்காரன்கள் வந்து நிற்கிறான்கள்... எழும்புங்கோ..." என்று சற்று மெதுவான குரலில் கூறியபடியே மனைவி என் அறைக்குள் நுழைந்தாள்.

எதிர்பார்க்கப்பட்டவர்கள்தான்... ஆனாலும் இவ்வளவு விரைவாகக் காலையிலேயே வருவார்கள் என்று நினைக்கவில்லை. நான் எழுந்து வெளியே வந்தேன்.

முதல் நாள் நான் சந்தித்த அந்த இளம் சீக்கிய ராணுவ இளைஞர் டிரைவர் ஆசனத்தில் இருந்தார். ஜீப் வண்டியிலிருந்த மற்றும் இரு ராணுவச் சிப்பாய்கள் கீழே இறங்கி நின்றார்கள். மற்றும் இரு சிப்பாய்கள் எனது வீட்டுக் கதவருகே நின்றனர்.

டிரைவர் ஆசனத்திலிருந்த காப்டன் சிங் என்னைக் கண்டதும், "செல்வநாதன் என ஒருவர் இருக்கிறாரா..?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

"அப்படி ஒருவர் இங்கே இல்லை..." என்றேன். "வீட்டில் யார் இருக்கிறார்கள்...? எல்லோரையும் வெளியே வரச் சொல்லுங்கள்..." என்றார் காப்டன் சிங்.

எனது பெண்பிள்ளைகள் இருவரும் மருமகனும் வெளியே வந்தனர்.

காப்டன் சிங் ஆசனத்திலிருந்து கீழே இறங்கினார். என்னையும் கூட்டிக்கொண்டு அந்த வீதியிலுள்ள வீடுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றிலுள்ளவர்கள் பற்றி விசாரித்தார். பதில் சொன்னேன்.

செல்வநாதன் என்பவர் இந்த வீதியில் இருப்பதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதென்று கூறிய காப்டன் சிங், "சரி, பார்ப்போம்..." என்று சொல்லிவிட்டுச் சிப்பாய்களுடன் ஜீப்பில் ஏறிச் சென்றுவிட்டார்.

மனைவி, பிள்ளைகள் முகத்திலே இனம் தெரியாத பீதி. "சரி, உங்கள் வேலைகளைக் கவனியுங்கள்..." என்று சொல்லிவிட்டு, நான் கிணற்றடிப் பக்கம் போனேன். கால்மணி நேரம்கூட ஆகியிருக்காது.

"மீண்டும் அவர்கள் வந்து நிற்கிறார்கள்..." என்று மனைவி வந்து சொன்னாள்.

நான் வெளியே வந்தேன். அதே ஜீப் வண்டி... அதே காப்டன் சிங். என் பெயர் அந்த காப்டனுக்குப் பரிச்சயமாகிவிட்டது.

"மிஸ்டர் கோபாலரட்ணம்... இங்கே விஜயநாதன் இருக்கிறானாம்... ஆள் எங்கே..?" – காப்டன் சிங்கின் கேள்வி இது.

சரியான தகவல் கிடைத்து வந்திருக்கிறார். இனி எதையும் மறைக்க முடியாது.

"விஜயநாதன் வேறொரு இடத்திலிருக்கிறான்... நான் போய்க் கூட்டி வருகிறேன்..." என்று பதிலளித்தேன்.

"எங்கே தூரமோ..? ஜீப்பிலேயே போகலாமே...?" – காப்டன் சிங் கேட்டார்.

"அங்கே பெண்பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்கள் பீதியடையக்கூடும். நானே போய்ச் சில நிமிடங்களுக்குள்ளேயே ஆளை அழைத்து வருகிறேன்..." என்று சொன்னேன். அவரும் சம்மதித்தார்.

எனது வீட்டிலிருந்து சற்று தூரத்திலுள்ள ஒரு வீட்டில் விஜயநாதன் முதல் நாள் தங்கியிருந்தான். இதற்குமுன் மூன்று நான்கு நாட்கள் என்னிடம் வந்து தங்கியிருந்தான். விஜயநாதன் 'ஈழமுரசு' அலுவலகத்தில் அச்சு யந்திரப் பகுதியில் பணியாற்றியவன். இவன் ஒரு முந்திரிக்கொட்டை மாதிரி! (இவனைப் பற்றிப் பின்னர் விளக்கமாகக் கூறுகிறேன்.)

விரைந்து விஜயநாதன் இருக்குமிடத்துக்குச் சென்றேன். கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தான். அவனை அவசரமாக அழைத்துக்கொண்டு வந்தேன்.

"உனக்கு செல்வநாதனைத் தெரியுமா..?" என்று காப்டன் சிங் அவனைக் கேட்டார். "தெரியாது..." என்று விஜயநாதன் பதிலளித்தான். "உனக்குத் தெரியும்... ஜீப்பில் ஏறு..." என்று கூறிய காப்டன், விஜயநாதனைக் கூட்டிச் சென்றார்.

மனைவி முணுமுணுத்தாள். 'இந்த விஜயநாதன் சொல்வழி கேட்காமல் திரிந்து சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறான்' என்பது அவளது முணுமுணுப்பு! இதில் உண்மை இல்லாமலில்லை.

விஜயநாதனைத் தேடி நேராக காப்டன் சிங் என் வீட்டுக்கு வந்ததற்கு, யாரோ தகவல் கொடுத்ததே காரணம். இனி என்னையும் நேராகவே தேடி வரலாம்.

இனியும் நேரத்தை வீணாக்கக்கூடாது... கிணற்றடிக்குச் சென்று நான்கு வாளிகூடக் குளித்திருக்கமாட்டேன்.

மீண்டும் மனைவி கிணற்றடிக்கு வந்து, "இரண்டு ஆமிக்காரன்கள் வந்து நிற்கிறான்கள்..." என்று சொன்னாள். அவள் முகம் பேயறைந்தது மாதிரி வெளிறிப் போயிருந்தது. பிள்ளைகளும் கவலையோடு நின்றனர்.

"ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்... எதுவும் நடக்காது. என்னைக் கூட்டிச் சென்றாலும் விரைவில் விட்டுவிடுவார்கள்" என்று ஆறுதல் கூறியபடியே முன் விறாந்தைக்கு (வராண்டா) வந்தேன்.

இரண்டு சிப்பாய்களில் ஒருவர் தமிழர். "டிரஸ் பண்ணிக்கொண்டு வாங்க..." என்றார் அந்தச் சிப்பாய். மற்றவரோ "ஜல்தி... ஜல்தி..." என்றார்.

வேட்டி, சட்டையை அவசரமாக அணிந்துகொண்டு வெளியே வந்தேன்.

என் வீட்டிலிருந்து சில யார் (கஜம்) தூரத்தில் ஒழுங்கையை (சந்து) தாண்டிக் கன்னாதிட்டி வீதியில் காப்டன் சிங் ஜீப்பிலிருந்தார்.

நான் ஜீப் வண்டியை அணுகியதும், "இந்த விஜயநாதன் யார்..? எங்கே, என்ன வேலை செய்பவன்..?" என்று

காப்டன் சிங் கேட்டார்.

விஜயநாதனைக் கூட்டிச் சென்ற சிறிது நேரத்துக்குள் வந்து, என்னிடம் இந்தக் கேள்வி கேட்டதும் ஆச்சரியமாக இருந்தது.

"'ஈழமுரசு' அலுவலகத்தில் மெஷின் மைண்டராகப் பணியாற்றி வந்தவன் விஜயநாதன்..." என்றேன்.

பின்னர் ஒரு துண்டுக் கடுதாசை பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்தார்.

"செல்வரத்தினம் என்பவர் யார்..?" என்றார். "அவர் 'ஈழமுரசு' ஜெனரல் மானேஜர்..." என்றேன் (இவரைத்தான் 'செல்வநாதன்' என்று அதிகாலையில் தேடி வந்தார்கள்).

பின்னர் அந்தக் கடுதாசை எனக்குக் காண்பித்துவிட்டுப் பெயர்களை வாசித்தார்.

"செல்வரத்தினம், பஷீர் காக்கா, ராஜேயன், கந்தையா, வேல்சாமி..." என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

ஆனால், அதில் என் பெயர் எழுதப்பட்டிருக்கவில்லை.

இதற்கிடையில், விஜயநாதன் 'தான் எல்.ரி.ரி.ஈ. (L.T.T.E. விடுதலைப்புலிகள் இயக்கம்)யைச் சேர்ந்தவன்' என்று ஒப்புக்கொண்டுவிட்டதாகவும், இப்போது குமாரும், விஜயநாதனும் தமது முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகவும் காப்டன் சிங் சொன்னார்.

விஜயநாதன் முதல் நாள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று, அங்கிருந்த குமார் என்ற இளைஞரையும் காப்டன் சிங் கூட்டிச் சென்றிருக்கிறார்.

இந்தக் குமாரும் 'ஈழமுரசு' அலுவலகத்தில் பைண்டராகப் பணியாற்றி வந்தவர். அச்சுக்கோப்பாளராகப் பணியாற்றிய ஓர் இளம்பெண்ணையே இந்தக் குமார் மணம் செய்துமிருந்தார். இந்தப் பெண்ணும் மற்றும் இவர்களின் உறவுமுறையான மற்றோர் இளம்பெண்ணும் (அவரும் அச்சுக்கோப்பாளர்) அந்த வீட்டிலிருந்ததால்தான் ராணுவம் அங்கு செல்வதைத் தவிர்த்து, நான் சென்று முதலில் விஜயநாதனைக் கூட்டி வந்திருந்தேன்.

இப்போது குமாரையும் விஜயநாதனுடன் சேர்த்து இந்திய ராணுவம் கைதுசெய்து வைத்திருக்கிறது. காப்டன் சிங் கையில் வைத்திருக்கும் துண்டுக் கடுதாசியில் விஜயநாதனின் பெயர் இருக்கவில்லை.

விஜயநாதன் தன்னை ஒரு எல்.ரி.ரி.ஈ. என்று ஒப்புக்கொண்டுள்ளதாகக் காப்டன் சிங் கூறியதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அரை மணி நேரத்துக்குள் அவன் இப்படிச் சொல்லியிருக்கமாட்டான்.

"விஜயநாதன் 'ஈழமுரசு' அலுவலகத்தில் மெஷின் மைண்டராகப் பணியாற்றியதுதான் எனக்குத் தெரியும். அவன் எல்.ரி.ரி.ஈ-யில் இருந்தானா என்பது தெரியாது..." என்று காப்டனிடம் சொன்னேன்.

www.padippakam.com

"குமாரை ஏன் பிடித்தீர்கள்..? அவனுக்குக் கண்பார்வை மோசமாயிற்றே..." என்று சொன்னேன்.

"குமாரும் விஜயநாதனுடன் சம்பந்தப்பட்டவன்தான்" என்று கூறிய காப்டன் சிங், "நீங்கள் என்ன செய்கிறீர்கள்..? எப்படி விஜயநாதனைத் தெரியும்..?" என்று கேட்டார்.

விஜயநாதன் ஏதாவது உளறியிருக்கலாம். தகவல் கொடுத்தவர்களும் என்னைத் தவிர்த்திருக்கமாட்டார்கள்.

விஜயநாதனையும் குமாரையும் விடுவிக்க வேண்டும். என்னைப் பற்றிய உண்மையைச் சொல்வதன் மூலம் நான் சந்தேகங்களைத் தெளிவுபடுத்த முடியும். இவை தவிர, அமைதிப்படையின் சிறைக்குள் என்ன நிகழ்கின்றன என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எனக்கே உரித்தான பத்திரிகைத்தனம்...

இந்த முடிவுடன் "நான்தான் 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரியர்..." என்றேன்.

கையில் வைத்திருந்த துண்டுக் கடுதாசியிலிருந்த பெயர்களைக் குறிப்பிட்டு, "இவர்களைச் சந்திக்க முடியுமா..?" என்று காப்டன் கேட்டார்.

"இப்போதுள்ள நிலையில் இவர்களை எங்கேயென்று தேட முடியும்..?" என்று பதிலளித்த நான், "இதில் குறிப்பிட்டிருக்கும் பேர்வழிகளில் சிலர் 'ஈழமுரசு' பத்திரிகை அலுவலகத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே பணியாற்றி வருபவர்கள்... இவர்களுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை..." என்று கூறினேன்.

"சரி, நீங்கள் என்னுடன் வாருங்கள்... உங்கள் உதவியிருந்தால் நல்லது..." என்று கூறியபடியே என்னை ஜீப் வண்டியில் ஏறச் சொன்னார்.

அதாவது, காலை ஒன்பது மணியளவில் இந்திய அமைதிப்படையின் ஜீப் வண்டி 'ஈழமுரசு' பிரதம ஆசிரியர் எஸ்.எம். கோபாலரத்தினம் என்கிற என்னை ஏற்றிக்கொண்டு சென்றது.

(தொடரும்)

நன்றி : ஜூனியர் விகடன்

## தீர்க்கப்படும் கணக்கு...

கணக்குப் பாருங்கள்
எத்தனை ஆயிரம் தலைகள்
காணாமற் போனதென்று...

எண்ணிப் பாருங்கள்
எத்தனை நூறு கட்டிடங்கள்
எரிந்து போனதென்று...

அரசாங்கங்கள் கொடுக்கின்ற
அறிக்கைகளை நம்பாதீர்கள்!
எந்த அரசாங்கத்துக்குத்தான்
சரியாக
'எண்ணி'ப் பார்க்கத் தெரியும்?

தாயும் தந்தையும்
எரிந்து கருகிப்போன
சாம்பலை எடுத்துப்
பல்துலக்கிக் கொண்டிருக்கும்
அந்தப்
பச்சைக்குழந்தையின்
கண்களில் பாருங்கள்
சரியான
கணக்கு எழுதப்பட்டிருக்கிறது!

அந்தக் குழந்தை
கொஞ்சம் வளர்ந்ததும்
படிப்பதற்குப்
புத்தகம் கேட்காது...
பிடிப்பதற்கு
துப்பாக்கி கேட்கும்!

— மு. மேத்தா

www.padippakam.com

பிந்திய செய்திகள்...

# இந்தியத் தேர்தல் முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்திரா கொங் | — | 194 | போலஸ்ட் புளொக் | — | 3 |
| ஜனதா தள் | | 141 | தெலுங்கு தேசம் | - | 2 |
| பாரதிய ஜ. க. | — | 86 | கொங்கிரஸ் (எஸ்) | — | 1 |
| சி. பி. ஐ. (எம்) | — | 32 | சுயேச்சையும் ஏனைய | | |
| சி. பி. ஐ. | — | 12 | கட்சிகளும் | | 26 |
| அ. இ. அ. தி. மு. க. | — | 11 | | | — |
| அகாலி தளம் | — | 6 | | | 524 |
| ஆர். எஸ். பி. | — | 4 | | | |
| தேசிய மாநாட்டுக்கட்சி | — | 3 | | | |
| பி. எஸ். பி | — | 3 | | | |

## வி. பி. சிங் பிரதமரானார்

டிச. 3

இந்தியாவின் ஏழாவது பிரதம மந்திரியாக விசுவநாத் பிரதாப் சிங் பதவியேற்றார். ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ராஜீவ் காந்தி விழாவுக்கு வந்திருந்து, வி.பி. சிங் பதவி ஏற்றதும் அவருடன் கை குலுக்கித் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பின்னர் ஹரியானாவின் முதல்வராக இருந்து வந்த தேவிலால் துணைப் பிரதமராகப் பதவி ஏற்றார். இருவரும் இந்தியில் பிரமாணம் செய்தார்கள். தேசிய முன்னணியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான சந்திரசேகர் வரவில்லை. பாராளுமன்றத்தில் வி.பி. சிங் தனது பெரும்பான்மை பலத்தை 30 நாட்களுக்குள் நிரூபிக்க வேண்டும் என்று ஜனாதிபதி வெங்கட்ராமன் வி.பி. சிங்கிடம் கூறியுள்ளார். வி.பி. சிங் பிரதமராகப் பதவி ஏற்றதும், தேவிலால் துணைப் பிரதமராகப் பதவியேற்றார். அவர் துணைப் பிரதமராகப் பதவி ஏற்பது கடைசி வரை ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால் பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் வியப்பு ஏற்பட்டது.

### சீக்கியத் தீவிரவாதி வெற்றி

நவ. 29

பஞ்சாபில் மொத்தமுள்ள 13 தொகுதிகளில் அகாலிதளம் (மான் பிரிவு) 6 இடங்களிலும், இ. காங்கிரஸ் இரண்டிலும், ஜனதா தளம் ஒன்றிலும், பகுஜன் சமாஜம் ஒன்றிலும், சுயேச்சைகள் மூன்றிலும் வெற்றி பெறுள்ளனர். இந்திரா காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுக் காவலில் இருந்த சீக்கியத் தீவிரவாதியும், காலிஸ்தான் விடுதலை இயக்கத் தலைவருமான அதீந்தர் பால் சிங் (சுயேச்சை) பாட்டியாலாவில் வெற்றி பெற்றுள்ளார். இந்திரா காந்தியை சுட்டுக் கொன்ற பீந்த் சிங்கின் மனைவி பிமல்கவுர் கல்சா ரோபர் தனித் தொகுதியில் அகாலிதளம் (மான் பிரிவு) சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஆகக் கூடுதலாக பெரும்பான்மை வாக்குகளை ராம் விலாஸ் பஸ்வான் என்பவர் பெற்றுள்ளார் இவர் 4 லட்சத்து98000 வாக்குகளைபெரும்பான்மையாகப் பெற்றுள்ளார்.**

**ஆகக் குறைந்த பெரும்பான்மையைப் பெற்று வெற்றி பெற்றவர் ஆந்திராவிலுள்ள தெலுங்கு தேசம் கட்சிவேட்பாளரொருவர். இவரது பெரும்பான்மை 9 வாக்குகள் ஆகும்.**

www.padippakam.com

# தமிழ் ஒளி —

# — ஸ்தாபனம்

அனைத்து இன மக்களுக்கும்

தனது

ந
வாழ்த்துக்கள்
தா
ர்

(நத்தார் வாழ்த்துக்கள்)

தெரிவித்துக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com


இதோ ஒரு புதியதோர் அறிவிப்பு

முற்றிலும் புதிய நிர்வாகத்தின் கீழ்

# U CAN BUY

- இந்திய, இலங்கை, கனடிய உணவுப் பொருட்கள்.....
- உணவுப் பொருட்கள்.....புதிய இறைச்சிவகைகள்.....
- பலசரக்கு வகைகள்
- காய்கறி வகைகள்......
- இன்னும் உங்களுக்குத் தேவையான
- அன்றாட பாவனைப் பொருட்கள்....

பெற்றுக் கொள்ள சிறந்த இடம்......

# யூ கான் வை

# U CAN BUY

5692 VICTORIA AVE.

தொலைபேசி 345-8622

உங்கள் தளபாடங்களை ஏற்றி இறக்கத்
திருப்திகரமான முறையில் எங்கள் வாகன சேவை
இன்றே நாடுங்கள்




படிப்பகம்

www.padippakam.com

இறைச்சிப் பிரியர்களுக்கோர் நற்செய்தி

# கொலோசொஸ்
# KOLOSSOS

Meat Market

1195 Boul St. Laurent Blbd
Montreal, Que. • H2X 2S6

- சென் லோறன்ற் மெற்றோவுக்கு அருகாமையில்...
- உங்களுக்கு தேவையான புத்தம் புதிய இறைச்சி வகைகள்...
- ஆடு, மாடு, கோழி, முயல், தாரா, காடை, பன்றி மற்றும் அனைத்து வகைகளும்...
- நீங்கள் விரும்பிய அளவுகளில் வெட்டித் தருகிறார்கள்.
- அதிக அளவில் எனில் மொத்த விற்பனை விலையில்....
- $100 க்கு மேற்படின் இலவச விநியோகம் இன்றே நாடுங்கள்.

## KOLOSSOS



Tel: 861-6606
861-2238

படிப்பகம்

www.padippakam.com

# இனவர்க்க... வேறுபாடுகளும் அதன்... விளைவுகளும்...

இலங்கையில் இன்றைய இனப்படுகொலைகட்கும் இனத்துவேஷ மனப்பான்மைக்கும் காரணம் என்ன என்று ஆழ்ந்து சிந்திக்க ஏற்பட்டால் பதிலாகக் கிடைப்பது, ஒருசில சுயநல நோக்கம் கொண்ட அரசியல் வாதிகளால் வலிந்து புகுத்தப்பட்ட இனவர்க்க வேறுபாடுகளும் அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளுமே என்றால் மிகையாகாது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு தமிழ் சிங்கள அரசியல் தலைவர்களிடையே சில கருத்து முரண்பாடுகள் மொழி ரீதியாக ஏற்பட்டிருந்தபோதிலும் 1956ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச்சிங்கள தேர்தல் விஞ்ஞாபனம் முன் வைக்கப் பட்டு சிங்கள மக்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை தமிழ் சிங்கள மக்கள் சகோதரர்களாகவே வாழ்ந்து வந்தனர். இன்று கூட இத்தனை அநர்த்தங்கள், பழிவாங்கல்கள்

**திலகா சேவியர்**



படிப்பகம்

கொலை பாதகங்கள் நடந்து முடிந்த பின்பும் கூட ஐம்பது சத விகிதமான சிங்கள - தமிழ் மக்கள் கனிப்பட்ட முறையில் நண்பர்களாகவே வாழ்கின்றனர். இதைக் காண்கின்றபோது அன்பு உறவு எத்தனை மேன்மையாக அன்புசார்ந்ததாக இருந்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். பழகுவதற்கு இனியவர்களாகவும் நட்புறவில் சிறந்தவர்களாகவும் விளங்கிய சிங்களவர் மத்தியிலே இப்படியானதொரு மனக்குரோதம் ஏற்பட்டதென்றால் அதற்குக் காரணமில்லாமல் இல்லை. அரசியல் ரீதியிலே சிங்கள தமிழ் அரசியல்வாதிகளிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் புரிந்துணர்வும் பிறர்சி நேசமுமற்ற தன்மையால் விகைப்படுத்தப்பட்டன. அத்தகைய மிகைப்படுத்தல் பெரும்பான்மை சிறுபான்மை எனும் பிரித்தாளும் கொள்கைக்கு வழி வகுத்ததெனலாம். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்கும் போது சிறுபான்மை, பெரும்பான்மை என்றோ, அன்றி விகிதாசார முறையிலோ எவரும் போராடவில்லை. மாறாக யாவரும் இலங்கைத் தாயின் மக்களாகவே போராடினார்கள். நாட்டுப் பற்றும் சுதந்திர தாகமுமிக்கவர்கள் ஒரு சேரக் குரல் கொடுத்தார்கள். அந்த நிலையில் பெற்ற சுதந்திரம் பொதுச் சொத்தாகவே மதிக்கப்பட்டது. அதனை தன்னலமும் பதவி மோகமும் கொண்ட அரசியல்வாதிகளால் இந்நிலை மாற்றப்பட்டு தமிழ் இனம் சிறுபான்மை இனமாக மாறி வலுவிழந்து நிற்க நேரிட்டது. அரசியல் சூதாட்டத்தில் மொழி பகடைக்காயாகி தனிமனித சுதந்திரத்திற்கு மிக எளிதாக சாவு மணியடிக்கப்பட்டது. தன்னலமிக்கமும் சர்வாதிகார நோக்கமும் கொண்ட சிங்களத் தலைவர்கள் இனபேதத்தின் மூலம் மக்களின் ஏகோபித்த ஆதரவுக்கு வழி வகுத்தார்கள். சிறிது சிறிதாக சிங்களவர்கள் மத்தியிலே குரோத

www.padippakam.com

மனப்பான்மையை வளர்த்தனர். அரசியல் மேடைகளில் தனிச் சிங்கள அரசு என்ற தாரக மந்திரம் சிங்கள மக்கள் செவிகளிலே தேன்மாரியாகப் பொழியப்பட்டது. அது மட்டுமல்லாமல் தமிழன் ஆக்கிரமிப்பாளர், நாடு முழுவதும்வெளிகரம் செய்து விடுவார்கள்.. என்ற கருத்தும் மிகவும் சாதுரியமாகப் புகுத்தப்பட்டது.

மக்கள் நலனையோ நாட்டு நலனையோ சிறிதும் நினையாத பதவி மோகம் கொண்ட இவர்களது ஆசை வார்த்தைகளில் மயங்கிய அப்பாவிச் சிங்கள மக்கள் இவர்களது கருத்துக்களை ஏற்கத் தலைப்பட்டனர். இனவாதத் தலைவர்களால் ஊன்றப்பட்ட

இனத்துவேஷ விதை முளைவிடுமுன்பே தலைவர்களின் அடியாட்கள் மூலம் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. 1958இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் அடிப்படை இது எனலாம். இத்தகைய இனக் கலவரங்கள் அடுத்துத் தொடர்ந்ததும் நமது சொந்த மண்ணிலேயே தமிழ் மக்கள் அகதிகளானார்கள். அத்தோடு அரசாங்கம் விகிதாசார முறையைப் பயன்படுத்தி தமிழ் மாணவர்களின் கல்வியில் கை வைத்ததும் தமிழ் இளைஞர்கள் வெகுண்டெழுந்தார்கள். அகிம்சையில் நம்பிக்கையிழந்த அவர்கள் ஆயுதமேந்தத் தலைப்பட்டனர். இவர்களின் நடைமுறைகளை அடக்க அரசு எடுத்த முடிவு ஒரு உள்நாட்டுயுத்தமாக உருவெடுத்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரசின் தலைவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அடக்கு முறைகள், மற்றும் அநீதியான செயற்பாடுகள் யாவும் தெற்கில் திரித்து உண்மைக்கு மாறாக விளம்பரப்படுத்தப்பட்டன. அதே சமயம் இளைஞர்களின் செய்கைகள் காட்டுமிராண்டித்தனமானவை



படிப்பகம்

www.padippakam.com

என்ற ரீதியில் மிகைப்படுத்தப்பட்டன. இலங்கையையும் சிங்கள மக்களையும் அக்கிரமித்து ஆள நினைக்கும் புலிகளை அடக்கி அழிக்கும் முயற்சியில் பங்கேற்க ராணுவத்தில் சேருமாறு சிங்கள இளைஞர்கள் வேண்டப்பட்டனர். செய்தித் தாபனங்கள் உண்மையைச் செய்தியாக்காமல் தடுக்கப்பட்டன. மீறி வெளியிட்ட பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. சிங்கள அரசு சார்ந்த செய்தி நிறுவனங்களின் உண்மைக்குப் புறம்பான செய்தி வெளியீட்டினையும் செய்திகள் திரிபுற்றமையாலும் சிங்கள மக்கள் மத்தியிலே தமிழர் பற்றிய ஓர் தப்புணர்ச்சி உண்டாயிற்று. அத்துடன் அடக்குமுறையினை நடைமுறைப்படுத்த அனுப்பப்பட்ட ராணுவ வீரர்களின் மரணம் பெற்றோர், மனைவி மக்கள் மத்தியில் வெறுப்பையும் குரோதத்தையும் வளர்த்தது. பாதிப்புற்ற ஒவ்வொரு சிங்களக் குடிகளும் தமிழரை விரோதிகளாக எண்ணி வேம்பாக வெறுத்தனர். தமிழரென்றால் "கொடியா" (புலி) என்று நினைக்கத் தலைப்பட்டனர். உண்மைகள் மறைக்கப்பட்டு நடைமுறைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டதாலும் ஏற்பட்ட விளைவுகளே இவை. அது மட்டுமன்றி தனி மனித சுதந்திரம் பறிக்கப்பட்டு பெரும்பான்மைக்கு உரிமை என்ற நிலையை ஒரு அரசியல் வியாபார தந்திரமாக நிலை நிறுத்த முயன்றமை சிறுபான்மை என்ற நிலைக்குத் தள்ளி ஒதுக்கப்பட்ட தமிழரை வெகுண்டெழ வைத்தது. அதன் பலாபலன் ஒரு உள்நாட்டு யுத்தமாக விளைவுற்றது. வளர்முக நாடான இலங்கையின் பொருளாதாரத்தை அடிமட்ட நிலைக்குத் தள்ளி ஆட்டங்காண வைத்திருக்கிறது. மேலும் தமிழரின் அடிப்படைத் தேவைகள் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதை அறிந்திருந்தும் அவற்றை ஏற்கவோ அன்றி தேவைகள் இருக்கின்றன என்று ஒப்புக் கொள்ளவோ விரும்பாமல் ஒரு மாய நிலையைத் திரையாகப் போட்டிருக்கிறார்கள். சிங்கள அரசியல் வாதிகள். இதன் பலன் தான் இன்றைய இலங்கையின் நலிவுற்ற நிலை. தெற்கிலே உருவாகி வளர்ந்து வரும் ஜே.வி.பி.யினரின் இன்றைய நடவடிக்கைகள் தமிழ் இயக்கங்களின் அன்றைய நிலையை ஒத்திருப்பதைப் பார்க்கும் போது தெற்கிலே உருவாக்கி விஷமேற்றி எறியப்பட்ட அம்பு பாறையிலே மோதித் திரும்பி வந்து நெஞ்சைத் துளைத்தாற் போன்ற பிரமையை ஊட்டுகிறது பிரமை மட்டுமல்ல உண்மையும் அதுதான். உண்மை மறைக்கப்பட்டு பொய்மையை மையமாக்கி நடாத்த எத்தனிக்கப்படும் எக்காரியமும் அழிவிலே முடிவுறும் என்பதை சிங்கள மக்கள் தலைவர்கள் மட்டுமல்ல தற்போது அரசியலில் புகுந்திருக்கும் இளைஞர் பெருமக்களும் உணர்ந்து ஒப்புக்கொண்டு திருந்தும் மனோ திடம் இருக்குமானால் இலங்கை சொர்க்க பூமியாக மாறிவிடும்.






படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# திண்ணைய நியாயங்கள்

## மனோகீதா

'கனகமக்கா, கனகமக்கா,' காலைச் சாப்பாட்டுக்கு அவித்த மரவள்ளிக் கிழங்கை பனையோலைப் பெட்டியில் பரவிக் கொண்டிருந்த கனகம், 'விடியக் காலமையில் யாராக்கும்', என்று தனக்குத் தானே சொல்லியபடி அடுப்படிக்குள் இருந்தவாறே 'யாரது' -குரல் கொடுத்தாள். 'அது நான் கதிரேசு. படலையைத் திற அக்கா'- பதில் வந்தது. 'ஆரது கதிரேசுவோ' என்றவாறே தளர்ந்திருந்த கூந்தலை இறுக முடிந்தவாறே கூரை பதித்த வாசற்படியால் குனிந்து வெளிப்பட்டாள் கனகம். வெள்ளிக்கிழமை என்று ஐந்தரைக்கே எழுந்து முற்றம் பெருக்கி சாணித் தண்ணி தெளித்து 'பளிச்' சென வைத்திருந்தாள் கனகத்தின் ஒரே மகள் கமலா. முற்றத்தை தாண்டி படலையின் கயிற்றுமுடிச்சை அவிழ்த்தவாறே, என்ன கதிரேசு தோட்டத்தாலை வாறியே? என்ற கனகத்தின் வரவேற்பையும் விசாரிப்பையும் தொடர விடாமல் ;



படிப்பகம்

குறுக்கிட்ட கதிரேசு, 'ஒரு விசயமக்கா' என்றவாறே வீதி யோரத்தில் கிடுகு வேலியுடன் சைக்கிளை நிறுத்தி விட்டு படலையை தாண்டி உள்ளே வந்தான் பதட்டமாக, அவனது முகத்தில் தெரிந்த பதட்டத்தையும் , அவசரத்தையும் இப்போது தான் கனகத்தால் உணர முடிந்தது. ' என்னடா தம்பி என்ன? அவள் குரல் பதைபதைத்தது. 'இல்லை அக்கா எங்கடை செந்தில் தோட்டத்தாலை வரேக்கை ......சொல்ல முடியாமல் தவித்தான் கதிரேசு. 'என்னடா மோனை என்ன நடந்தது சொல்லு, கனகம் பதறினாள். 'தோட்ட வெளியிலை பெடியலை பிடிக்க என்டு ஆமிக்காரர் படுத்திருந்தவங்கள். விடியக்காலை 4 மணி இருட்டுக்கை தெரியேல்லை [illegible] செந்தில் தோட்டத்தாலை வரேக்கை சுட்டுப் போட்டாங்கள் அக்கா. அவன் சொல்லி முடித்தானோ இல்லையோ கனகம் பதறி பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

கிணற்றடியில் வாழைகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த கமலா ஒன்றும் அறியாதவளாய் ஓடி வந்தாள். அம்மா என்ன நடந்தது, தாயின் கைகளைப் பற்றியவாறே கமலாவும் கலங்கினாள். அருகில் நின்ற கதிரேசு கண்களில் பெருகும் நீரோடு வாயை இரு கைகளாலும் மூடியவாறே விம்மினான். என்னம்மா நடந்தது சொல்லுங்கோ- அவளின் உடல் நடுங்கியது. 'என்ரை பிள்ளை நான் என்னம்மா சொல்லுறது'. கனகம் விக்கி திக்கித் திணறினாள். நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விட்டது என்று மட்டும் கமலாவுக்கு புரிந்தது. ஆனால் அது என்ன? அம்மா சொல்லம்மா' என்றவள் தாயின் மோவாயைப் பிடித்து நிமிர்த்தியவாறே. கனகம் தனது அழுகையை சிறிது கட்டுப்படுத்தியவளாக, ' செந்தில் தோட்டத்தாலை வரேக்கை ... ஆமிக்காரர் சுட்டுப்

www.padippakam.com

போட்டாங்களாம் பிள்ளை– மகளை அணைத்தவாறே இறுகப் பிடித்துக் கொண்டாள். 'அத்தான், அத்தான்' என்று சத்தியவாறே மூச்சையாகி விட்டாள். இவர்களின் அழுகுரல் கேட்ட அண்டை அயலார்கள் ஓடி வந்தார்கள். என்ன நடந்தது? என்ன நடந்தது? ஒரே விதமான கேள்விகள். கதிரேசு தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். வந்திருந்த வயதான பெண்கள் ஒப்பாரி பாடத் தொடங்கி விட்டார்கள். கமலா மயங்கியபடியே தாயின் மடியில் படுத்திருந்தாள்.

எல்லாம் நடந்து முடிந்து வாரம் ஒன்றாகி விட்டது. செந்தில்– கமலா இருவரின் அன்பின் சாட்சியான 3 வயது நிரம்பிய மகன் தான் கமலாவின் துக்கத்திற்கு ஒரு வடிகாலாக இருந்தான். இந்த ஒரு வாரத்தில் 'அப்பா எங்கை அம்மா' என்ற அந்த மழலையின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல், அவள் கண்ணீரையும் விம்மலையும் தான் பதிலாகத் தர முடிந்தது. கமலா தன் கணவனைப் பற்றி நினைத்துப் பார்த்தாள். அவள் வாழ்ந்தது சிறு காலம் எனினும், அவன் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவன். செந்தில் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. அசாதாரண தன்னம்பிக்கை மிக்கவன். பள்ளியில் மிகவும் கெட்டிக்காரனை அவன் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் முதல் முறையிலேயே பட்டதாரிப் படிப்பிற்கான மதிப்–பெண்ணைப் பெற்றான். எத்தனையோ கஷ்டங்கள். தரப்படுத்தல் முதலிய போட்டிகளிற்கு மத்தியில் தனக்கு கிடைத்த வாய்ப்பை தவறவிட்டு விட்டு, அடுத்த முறை பரீட்சை எழுத அவன் விரும்பவில்லை. தொடர்ந்து படித்து பட்டமும் பெற்றான். ஆனால், பெயருக்கு கூட ஒரு தொழிலுக்கு விண்ணப்பிக்கவில்லை. வேலைக்கு நேர்முகப்பரீட்சைக்கு போகவும் செல்வாக்குப் பெற்ற



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் பிரமுகரின் கடிதம், ... பணம்– அதாவது நாகரீகமாகச் சொல்லப் போனால் அன்பளிப்பு. இவை இரண்டும் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஒரு நியாயமான திறமையுள்ள ஒருவனுக்கு இவை இரண்டும் இல்லையென்றால், வேலையே இல்லை என்ற அவலநிலை. ச் சீ...இதென்ன கொடுமை, மாணவனுக்கு தரப்படுத்தல், கல்வித்தகமை உள்ளவனுக்கு ,பணம், அரசியல் செல்வாக்கு. தமிழனாகப் பிறந்த ஒரே குற்றத்திற்காகக,எத்தனை முட்டுக்கட்டைகள்; வேதனைகள்; விரக்திகள்; இப்படி செந்தில் படிக்கும் காலத்தில் மாணவர் கூட்டங்களில் எத்தனையோ முறை கிளர்ந்தெழுந்து, உரை நிகழ்த்தியிருக்கிறான். தனது திறமையை தானே பயன் படுத்திக் கொள்ள முடியும் என்ற வைராக்கியம் மிக்க செந்தில் படிப்பு முடிந்தவுடன் விவசாயத்திலேயே இறங்கி விட்டான். விவசாயம் பற்றிய நூல்களைப் படிப்பதும், விவசாய அராய்ச்சி செய்து புதிய புதிய பயிர்களையும், புதிய நெல் இனங்களைப் பயிரிடுவதும் அவனது செம்மையான அறுவடைக்கு காரணமாயின. அவனது தன்னம்பிக்கையில் கமலாவுக்கு மானசீகமான மதிப்பு. அந்த நம்பிக்கை விளக்கு புயல் காற்றிலே எதிர்பாராமல் அணைந்து போகும் என்று கமலா நினைக்கவே இல்லை.

கணவனின் நினைவுகளிலிருந்து விடுபட்ட கமலா சிறிது தெளிவடைந்தவளாக காணப்பட்டாள். இப்படியே கவலையும் கண்ணீருமாக இருந்தால், எனது நிலையும், குகனின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடும். என் கணவனின் இழப்பு எனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. ஆனால் இன்றைய நிலையில் என்னைப் போல் எத்தனை கமலாக்கள், எத்தனை குகன்கள் எல்லோருமே கலங்கி நின்று விட்டால், நாளைய குகன்கள்,



படிப்பகம்

www.padippakam.com

படிக்காதவர்களாக, தம்மைத் தாம் உணராதவர்களாக...
இல்லை. ஒரு நாளும் இல்லை. நாளைய தலைமுறையை இன்றே உரம் ஊட்டி வளர்த்து, நாம் சிறந்த அறுவடையைப் பெற வேண்டும். கமலாவின் மனதில் திடமும், நம்பிக்கையும் முகிழ்த்து எழுந்தது. 'மகளுக்காக' நான் வாழப் போகிறேன். கமலா வாய் விட்டுச் சொல்லிக் கொண்டாள். மண்வெட்டியை எடுத்து தோளில் சாத்தியவாறே தோட்டத்தை நோக்கி நடக்கலானாள் கமலா.

உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே." (யாவும் கற்பனை)

# முத்தமிழ் விழா மலர் ஒரு... மூத்த கவிஞரின் பார்வையில்...

தலைவர்,
'தமிழர் ஒளி'
மொன்றியால்.

அன்புடையீர்,

'பார்வை' பத்திரிகையின் முத்தமிழ் விழா சிறப்பு மலர் கிடைத்தது. அனுப்பு உதவியமைக்கு மிகுந்த நன்றி.

கவர்ச்சியான அட்டை, கனதியான விடயங்கள், கவின்தரும் அச்சு யாவும் பத்திரிகையின் தரத்தை மேம்படுத்துகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

எடுத்த எடுப்பிலேயே 'தமிழ்ப்பிரியா'வின் சமர்ப்பணக் கவிதை நெஞ்சைத் தொட்டுவிடுகின்றது. கவிதையின் சிறப்பியல்புகளுள் சொல்லுக்குப் புதிய அர்த்தம் கற்பிப்பதும் ஒன்று. அந்த வகையில் 'சிந்தும் இரத்தம் ஒரு தேசம் வரைகிறது', 'தமிழுக்கு எழுத்து நடக்கிறது', 'இழப்புகள் சுமந்து எழும் தமிழீழம்' முதலாய சொற்றொடர்கள் கற்பிக்கும் அர்த்தங்கள் கோடி. அருமையான பிரயோகம்.

'சம்பு'வின் எதுகைகள் நிறைந்த தத்துவக் கவிதையையும் பல தடவைகள் படித்துச் சுவைத்தேன்.

'தமிழரசி'யின் சிறுகதை நமது கலாச்சாரத்தின் பெருமையை உணராத தமிழ் இளைஞர்களுக்குப் பாடம் [illegible] புகட்டுகிறது.

கே.ரி. சண்முகராஜாவின் 'கண்ணதாசனும் காமத்துப்பாலும்' அ[illegible]கி அகன்றவோர் அரிய ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

கனேடிய மக்களையும் விழாவுடன் தொடப்புபடுத்தித் தமிழரின் திராவிடரின் பழைமையையும் பண்பாட்டையும் அவர்கள் அறியும் வகை மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியன.

வாழ்க தங்கள் பணிகள், வளர்க 'தமிழர் ஒளி'.

அன்புடன்
வி. கந்தவனம்.


படிப்பகம்

www.padippakam.com



# பிறந்தன சிறந்தநற் கவிதைகளே!

கோடையில் வெங்கதிர்
குடித்திடத் தண்கடல்
கூடுவிட் டாவியில் நீர்எழவே
கூடின விரிந்தன
கூரையிட் டேமுகிற்
கூட்டங்கள் கொள்ளையிற் கூடினவே!

---

வானத்தி லோர்கலி
யாணத்தைப் போற்பல
மாட்சிகள் காட்சிகள் ஆயிரமே!
தானனன் னனத்
தானனன் னனத்
தாளங்கள் மேளங்கள் ததிங்கிணத்தோம்!

## கவிஞர் வி. கந்தவனம்

www.padippakam.com

வானவில் மணவறை
மாப்பிள்ளை வரவினை
வாழ்த்தி வளர்ந்தெதிர் பார்த்திருக்கோ?
மேனகைப் புன்னகை
போலப்பின் வாங்கிடும்
வெயிலுஞ் சிறந்து மறைந்ததுவே!

மேவின மோதின
தாவின தழுவின
மின்னின முழங்கின மேகங்களே!
ஆவினம் வீடுகள்
ஓடின ஆடின
அடர்வன வெட்டையில் மயிலினமே!

திரண்டன குவிந்தன
சேர்ந்தன செறிந்தன
திடுக்கிடத் திடுக்கிட இடிஇடித்தே
வெருண்டன விலங்குகள்
மிரண்டன பறவைகள்
சுருண்டன பாம்புகள் சுண்டெலிகாள்!

இருண்டதி ராவென
இறங்கின மேகங்கள்
இழிந்தன இரைச்சலிற் பொழிந்தனவே!
புரண்டது போதிய
வெள்ளமப் புடைவையைப்
பூமகள் போர்த்தனள் ஆர்த்தனளே!

செழித்தன காடுகள்
சிரித்தன சோலைகள்
சொழித்தன இன்னிசை குருவிக்குழாம்!
கொழுத்தது மலைவளம்
கொஞ்சினர் காதலர்
குழந்தைகள் ஆடினர் பாடினரே!

அறமுறை ஓங்கிட
அகங்கள் குளிர்ந்திட
ஆயநற் கலைகளும் வளர்ந்தனவே!
குறைகள் மறைந்தன
குணங்கள் நிறைந்தன
கோயிலிற் பூசைகள் தொடர்ந்தனவே!

கருமுகில் கலைந்தது
கலைமதி தெரிந்தது
கவிஞனின் நெஞ்சமுங் கனிந்ததுவே!
பெருகிட நினைவுகள்
பீறிட உணர்வுகள்
பிறந்தன சிறந்தநற் கவிதைகளே!

www.padippakam.com

# நிகழ்வும்... அகழ்வும்... அம்பு

## ஒரு தாயின் அறிவிப்பு

கனடா, ரொரன்ரோ நகரில் வாழும் ஒருவருக்கு தொலை பேசி அழைப்பு ஒன்று கொழும்பு மாநகரில் இருந்து வந்தது. அழைப்பை ஏற்று மறுமொழி கொடுத்தவருக்கு தனது மனைவி பேசுகிறார் என்பது தெரிந்தது.

" என்ன கனகம் ...இருந்தாப் போல...."

" உங்கள் மகன் இயக்கத்துக்கு ஓடி விட்டான்....."

" என்ன செய்து கொண்டு இருக்கிறாய் அங்கை..
என் விட்டனீ.

" ஊரிலை இருந்தது எல்லாம ஓடி விட்டதுகளாம், இவனை மட்டும் நான் எப்படி மறிப்பது. போனது எனக்குத் தெரியாது.

" அப்ப என்ன செய்யப் போகிறாய்...?

" எல்லாத் தாய்மாரும் அழுதுகொண்டு இருந்தால் நாமும் அழலாம் ஊரோடு ஒத்தோடு- அவன் என்றும் உயிரோடு இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம்....."

மலைத்துப் போய் இருக்கிறார் தந்தை- இயக்கத்திற்குப் போன அவர் மகனுக்கு வயது - 14.


படிப்பகம்

www.padippakam.com




# நில்லாத.. ஒ நகும்... சுவர்....

1961ல் ஆரம்பம்– அதுதான் பெர்லின் மதிற்சுவர். மேற்கு ஜேர்மனி மக்களிடமிருந்து எந்தத் தொடர்பும் உறவும் கிழக்கு ஜேர்மனி மக்களுக்கு இருக்கக் கூடாதென கிழக்கு ஜேர்மன் அரசு போட்ட இரும்புத் திரைதான் பெர்லின் மதிற்சுவர். இன்று 28 ஆண்டுகளுக்குப் பிறகு மக்களின் உணர்வுகள் எழுச்சியின் விளிம்பில் உருவெடுத்தபோது இரும்புத்திரை அரசு பொறு கண்டது. எவரும் மேற்கு ஜேர்மனிக்குள் எந்தவித தடையுமின்றி போய் வரலாம் என அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் கிழக்கு ஜேர்மனி அரசுக்கு உருவாகி அப்படியே அறிவித்தது. ஒக்டோபர் ஒன்பதிலிருந்து 5 மில்லியன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்குள் நுழைந்தார்கள். – பலன் மீண்டும் மலர்ந்த காதல்கள் – உறவுகள் உபசரிப்புகள் – கட்டித்தழுவல்கள் – ஆனந்தக் கண்ணீர்கள் இன்னும் ஒரு விசேஷம். அப்படி நுழைந்த கிழக்கு ஜெர்மனி பிரஜை ஒருவருக்கு ஒரு மில்லியன் மார்க் (760000 டொலர்கள்) ஜாக்பொட் முதல்பரிசு கிடைத்துள்ளது. உண்மைக்கு தடை ஒரு பொய் வேலி.

# Czech leaders to meet

கம்யூனிச ரஷ்யாவில் இருந்து அரசியல் சுதந்திரம், சீரமைப்பு ஒன்றை அறிமுகம் செய்த தலைவர் கொபர்சேவ் இந்த வருடத்தின் உலகக் கதாநாயக நிகழ்வதில் வியப்பில்லை. சீனவில் மக்களின் எழுச்சி இராணுவ ஏவலில் முறியடிக்கப்பட்டாலும்



படிப்பகம்

www.padippakam.com

# as protests continue

மக்கள் இன்னும் நிறுபூத்த நெருப்பாகவே உள்ளார்கள். கிழக்கு ஜேர்மனியைத் தொடர்ந்து இப்பொழுது செக்கோசெலவாக்கியா மக்கள் எழுச்சி மலையாகிறது. அரசு ராஜினாமாவை அறிவித்து விட்டது. சுதந்திரக்காற்றை சுவாசிப்பதில் இரும்புத்திரை நாட்டு மக்கள் இப்பொழுது வெற்றியடைந்து வருகிறார்கள். மக்களின் மனவோட்டத்தை மதித்து சுதந்திர நீரோட்டத்திற்கு வழி கோலிய கொப்பர்சேவின் புகழ் கொடிகட்டிப் பறக்கிறது.

## இந்தியத் தேர்தல்......

சுதந்திர இந்தியாவுக்கான ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தல் நவெம்பர் 22ம் திகதி நடக்கிறது. இதை எழுதும் இந்த நேரம் இந்தியாவெங்கும் பிரச்சார அலைகளின்பிடிபாடுகள் கொடாந்த வண்ணம் உள்ளன. இரு தேசத் தலைவர்களின் பேரர்கள்– அதாவது நேருவின் பேரன் ராஜீவ், மகாத்மா காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தியும் நேருக்கு நேர் –அமெதி தொகுதியில் போட்டிபோடுகிறார்கள். ரஜீவின் தென்னைசியப் பிராந்திய கொள்கைகள்..இலங்கைக்கு வந்து ஆயிரக்கணக்கில் இராணுவத்தை இழந்த ரஜீவின் இலங்கை விவகாரம்... கோடிகோடியான பணத்தை கமிசனைப் பெற்று சுவீஸ் வங்கியில் இருப்புச் செய்து ஆயுதக் கொள்வனவு செய்த ருபாபர்ஸ் ஆயுதப் பேர ஊழல்....இதற்குமேலாக வேட்பாளராக நிற்க மறுத்த ரஜீவின் ஆளும் அரச பாதுகாப்பு மந்திரி பந்த் அவர்களின் அறிவிப்பு....ரஜீவின் வெற்றியை ஆடுபாலத்தில் கோடு காட்டுகிறது. நவெம்பர் 27ம் திகதி வாக்கில் ஆளும் இந்திரா காங்கிரஸா, அல்லது வி.பி.சிங் தலைமையில் ஆன எதிர்கட்சி முன்னணியா? என்பது தெரிந்துவிடும்.



படிப்பகம்

# அம்பாறையும்... அறிவிப்பும்......

இந்தியா அம்பாறையை காலி செய்த சில நாட்களில்

- **E.P.R.L.F அறிவிப்பு.** ஈரோஸ் எம்மோடு இணைய வேண்டும் இல்லையேல் அம்பாறையில் அவர்களது முகாம்களை காலி செய்ய வேண்டும்.

- **ஈரோஸ் முறைப்பாடு:** ஈரோஸ் தலைவர் பாலகுமார் - சங்கர் ராஜி ஆகியோர் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சனிடம் முறைப்பாடு "ஒற்றுமையின் நிமித்தம் இருக்கிறோம். இல்லையேல் ஆயுதம் எமது கைக்கும் வரும்....

- **புலிகள் அறிவிப்பு:**
  எமது ஆதரவாளர்களில் 4 பெண்கள் கற்பழிக்கப் பட்டு கொலை செய்யப்பட்டு E.P.R.L.F இராணுவ தொண்டர் முகாமில் சடலம் இருக்கிறது.

- **செய்திகள் அறிவிப்பு :-**
  அம்பாறை E.P.R.L.F முகாம் தாக்கப்பட்டு ஏராளமானோர் இறந்தனர். 50 மேற்பட்டோர் கைது. மீதிப்பேர் காட்டுக்குள் ஓடி விட்டனர். கைப்பற்றிய ஆயுதங்கள், போராளிகள் சகிதம் புலிகள் விரைவு.

- **இந்தியா அறிவிப்பு :-**
  இந்தியா அம்பாறையை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

ஆம் அறிவிப்புகள் ஏராளம், எம் இழப்புகள்.... அதாவது எம் சிறார்கள்.... இனி இனி தாராளம்.......

- **பிந்திய செய்தி:** அம்பாறை அகதிகளுக்கு நாளொன்றுக்கு 10 லட்சம் ரூபா செலவு: சிறீலங்கா.

www.padippakam.com

• பிலிப்பைன்ஸில் அரசுக்கெதிரான போர் தீவிரம்:-

AP

**Pro-government soldier (l) and rebel exchange greeting in Manila.**

•

கனடா புதிய N·D·P தலைவராக முதல் தடவை ஒரு பெண் தெரிவு·

**Broadbent cheers McLaughlin, first female leader of a national party.**



படிப்பகம்

www.padippakam.com

யாழ். பத்திரிகை "உதயன்"

## ● கனடாவில் நம்மவர் படும்பாடு

# துயரங்களைத் தந்தைக்கு தூதுவிடும் அன்பு மகள் • • •

.................

ரொரண்டோ
21. 07. 1989

அன்புள்ள அப்பா..................

நான் ஏதோ சுகமாக இருக்கின்றேன் உங்கள் சுகத்தை அறிய ஆவலாக உள்ளேன். அப்பா நான் கனடாவில் சந்தோசமாக இருக்கின்றேன் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனால் நான் தினமும் கண்ணீர் வடிக்கிறேன், எனக்கு நிம்மதி என்பது கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் கனடா மாப்பிள்ளை என்றால் சரியான மதிப்பு. இங்கு வந்து பார்த்தால் தான் மாப்பிள்ளை படும் பாடு தெரியும். இங்கு கணவனும் மனைவியும் வேலைசெய்யாவிட்டால் வாழ்க்கை நடத்துவது கடினம்.

அவர் காலை ஆறுமணிக்கு வேலைக்குப் போனால் மாலை நான்கு மணிக்கு வருகிறார். 4.30 மணிக்கு வேறு இடத்திற்கு வேலைக்குப் போனால் இரவு 12 மணிக்கு வருகிறார். நான் காலை 8மணிக்கு வேலைக்குப் போனால் மாலை 5 மணிக்கு வருகிறேன். பின்னர் இரவு வேலை என்றால் திரும்பிச் சென்று அதிகாலை வருகிறேன்................

எமது வாழ்க்கை இயந்திரமயமானது வாழ்க்கைச்செலவு அதிகரிப்பிற்கு ஈடுகொடுத்து வாழ உழைக்க வேண்டியிருக்கிறது. நாம் இருவரும் வீட்டில் சந்தோசமாக இருக்கும் நாட்கள் குறைவு.

எனது ஆசைகள் மனக்கோட்டைகள் எல்லாம் சிதைந்துவிட்டன பணம் இருந்து என்னபயன். நிம்மதி வேண்டுமே. 'ஷெல்' சத்தம் இங்கு கேட்கவில்லை என்ற நிம்மதிதான் இருக்கின்றது..........

......உணர்ச்சிகளை அடக்கி ஏதோ நடைப்பிணமாக வாழ்கின்றேன். அப்பா உங்களிடம் கெஞ்சிக் கேட்பது என்னுடைய மற்றைய சகோதரிகளையும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு திருமணம் செய்து கொடுத்து விடாதீர்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை உணர்ந்து விட்டேன்.

இப்படிக்கு
தங்கள் பாசமிகு மகள்
........................



படிப்பகம்

www.padippakam.com

வெளியிட்ட தகவல்கள்.

# கனடாவில் ......

# தமிழ்க்குழந்தைகள்...

இன்று வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வெளிநாட்டு மாப்பிள்ளைக்குத் தனி மதிப்பு உண்டு அதுவும் கனடா மாப்பிள்ளை என்றால் சொல்லத்தேவையில்லை பெரும் மதிப்பு.

என்ர பிள்ளையை "ஒரு மாஸ்ரர் பெடியனுக்குக் கட்டிக் குடுக்கச் சொல்லுறியளோ...... உங்களுக்கென்ன விசரே... ஒண்டுக்கும் வழியில்லாத முத்தம்மா கூட தன்ர பிள்ளைய கனடா மாப்பிள்ளைக்குத்தான் கட்டிக் கொடுத்திருக்கிறாள்... அவளைவிட நாங்கள் என்ன குறைஞ்ச ஆக்களே... எவ்வளவு சீதனம் கொடுத்தாலும் பறவாயில்ல கனடா மாப்பிள்ளைக்குத் தான் என்ர பிள்ளையக் கட்டிக்குடுக்கிறது..."

இன்று தாய் நாட்டில் வேலை செய்யும் மாப்பிள்ளைகளுக்கு மதிப்புக் குறைந்து விட்டது. வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் அவர்களுக்கு எவ்வளவு சீதனத்தையும் கொடுத்து திருமணம் செய்ய தயாராக இருக்கின்றார்கள்.

இப்போது படிப்பைப்பற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. "தம்பி எந்த நாட்டில..." நாட்டை வைத்துத் தான் தீர்மானித்துக் கொள்கின்றார்கள்.

## கனவிலேயே தாயைக் காணலாம்

எம் தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளில் எப்படி வாழ்கின்றார்கள். தமிழை வளர்க்கிறார்களா? அல்லது மறந்து விட்டார்களா? என்பது பற்றி அறிந்து கட்டுரை எழுத விரும்புகிறோம். இதற்காக, கனடா சென்று திரும்பிய சிலரைச் சந்தித்தோம். அவர்களிடம் இருந்து பெற்ற தகவல்களை இங்கு கட்டுரையாகத் தருகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேச சுதந்திர ஆசிரிய சங்க உலக மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக கனடா சென்று திரும்பிய தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அவர்களைச் சந்தித்தோம். அவரிடம் இருந்தும் கனடா பற்றிய தகவல்களைப் பெற்றோம்.

கனடாவிலே நம்மவர்கள் பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியாது. கனடாவில் கணக்காளர், நில அளவையாளர், படவரைஞர், தொழில் நுட்ப உதவியாளர் இப்படியான தொழில் தெரிந்தவர்கள் சற்று கஷ்டப்பட்டால் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

ஏனையோருக்கு சிறிய சிறிய வேலைகளே கிடைக்கின்றன. லேபிள் ஒட்டுதல், பொதி செய்தல், பசை பூசுதல், விலை விபரங்கள் குறித்தல் போன்ற சில்லறை வேலைகளே கிடைக்கின்றன.

கனடாவில் எந்தக் கம்பனியின் உயர் பதவிகளிலும் கனடியரே கடமையாற்றுகின்றனர். வெளிநாட்டவர்கள் உயர்பதவிக்கு வந்தாலும், கனடியர்கள் அவர்களுக்குக் கீழ் இருந்து கடமையாற்றும் நல்ல பண்பு அவர்களிடம் காணப்படுகின்றது.

கனடியர்கள் தமிழர்கள் மீது ஆழ்ந்த அனுதாபம் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் துன்பங்களில் பங்கு கொண்டு உதவ விரும்புகின்றார்கள்.

கனடாவின் வாழ்க்கைச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டுதான் செல்கிறது. இந்த வாழ்க்கைச் செலவு உயர்வை ஈடுசெய்ய தொடர்ந்து உழைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

'ரொரன்டோ' நகர வீதிகளில் செல்லும் தமிழ் இளைஞர், யுவதிகளைப் பார்த்தால் மற்றவர்களுடன் கதைக்கக் கூட நேரமின்றி வேகமாகச் சென்று கொண்டிருப்பார்கள்

## உதரன்

இந்த வேகத்திற்கும் அவர்களது வேலைக்கும் தொடர்பு உண்டு.

காலை 5.30 மணிக்கு வேலைக்குப் போகிறார்கள். மாலை 4 மணிக்கு வேலை முடிந்து வருகிறார்கள். மீண்டும் 4.30 க்கு வேலைக்குப் போகிறார்கள். நள்ளிரவுவரை வேலை செய்துவிட்டு வீடு திரும்புகிறார்கள்.

கணவன் மனைவியாக இருப்பவர்கள் இருவரும் வேலை செய்யாவிட்டால் குடும்ப வாழ்வை ஓட்டுவது கடினம். கணவன் மனைவியாக வாழ்பவர்கள் தங்கள் பிள்ளைகளை பிள்ளைகளைப் பராமரிப்பவரிடம் அதிகாலையிற் கொண்டு சென்று கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். பிறகு மாலை வந்து குழந்தையை வீட்டிற்கு



படிப்பகம்

அழைத்துச் செல்கின்றார்கள் நித்திரையிலே அதிகாலையில் பராமரிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தை மீண்டும் அழைத்துச் செல்லும் போதும்நித்திரையிலேயே இருக்கின்றது.இந்தக் குழந்தைக்குத் தாய் தந்தையரின் பாசம் கிடைக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. கனவில் மட்டுமே குழந்தைகள் பெற்றோரைப் பார்க்க முடியும். இவர்களுடைய குடும்ப வாழ்விலும் மகிழ்ச்சி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய இவர்கள் எப்படியும் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றார்கள். இதனால் இவர்களுடைய வாழ்க்கை இயந்திரமயமானதாக மாறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

விடுமுறை தினங்களில் மட்டுமே இவர்கள் மகிழ்ச்சியாகப் பொழுதைக் களிக்கின்றார்கள். மற்றும்படி இவர்களுக்கு லீவு என்பதே இல்லை.

கனடாவில் ஆண்கள் செய்கின்ற வேலைகளைக் கூடப் பெண்களும் செய்கின்றார்கள். இந்த வேலை ஆண்களுக்கு உரியது,இந்த வேலை பெண்களுக்கு உரியது என்ற வரையறை இல்லை.

கனடியப் பெண்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகவும் கனரக வாகனங்களைச் செலுத்துபவர்களாகவும் கடமை புரிகின்றனர். கனடாவில் ஆண் பெண் சமத்துவம் நிலவுகிறது. இங்கு பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று கோசமிடுபவர்கள் கனடா சென்றால் சமத்துவமாக வாழலாம்.

நம் தமிழ்ப் பெண்கள் லேபிள் ஒட்டுதல், பொதி செய்தல், பூக்கள் செய்தல், சேட் பைக்கிங் செய்தல், சேட் பட்டின் கட்டுதல் போன்ற சிறிய வேலைகளைச் செய்து வருகின்றார்கள்.

கனடாவில் இயந்திரங்களே அதிக வேலைகளைச் செய்கின்றன. சில்லறை வேலைகளையே மனிதன் செய்துவருகின்றான்.

தமிழர்கள் பலர் கனடாவில் வட்டிககடை வைத்திருக்கின்றார்கள். தீவுப் பகுதியில் பிரபலமாக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒரு வட்டிக கடையை வைத்திருக்கின்றார். அவர் சுகயீனமாகி இருபபதால் அவருடைய குடும்பத்தினர் இக் கடையைத் தொடர்ந்து நடத்துகின்றார்கள்.

இவருக்குப் போட்டியாக வவுனியாவில் பிரபலமாக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வட்டிக் கடை வைத்திருக்கின்றார். தமிழன் எங்கு சென்றாலும் தனது தனித்துவமான குணத்தைக் காட்டத் தவறுவதில்லை.

தமிழ்ப் பகுதிகளில் பிரபல்யமாக நடைபெறும் சீட்டுப் பிடிக்கும் முறை கனடாவரை தொடர்கின்றது. அங்கு சீட்டுப் பிடித்தல் ஒரு தொழிலாகவே மாறிவிட்டது.

www.padippakam.com

வடபகுதியில் முக்கிய உயர் பதவிகளில் இருந்தவர்கள் கனடாவில் தமக்கு நல்லவேலை கிடைக்கும் என்று நம்பி அங்கு சென்றார்கள். அவர்கள தற்போது பிரபலயான கம்பனிகளில பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களாக அதாவது காவலாளிகளாகக் கடமையாற்றி வருகின்றார்கள்.

யாழ். நகரில் பிரபல கவிஞராக இருந்தவர் வேதனையுடன் காவலாளியாகக் கடமையாற்றி வருகின்றார். இங்கு பட்டப் பின்படிப்பை மேற்கொண்ட முகாமையாளர்கள் பலர் சிற்றூழியர்களாகவே கடமையாற்றுகின்றனர்.

வடக்கில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் அதிபராக இருந்த ஒருவர் கனடிய பெற்றோல் செற் ஒன்றில் வாகனங்களுக்குப் பெற்றோல் ஊற்றுகின்றார்.

கனடாவில் வேலை செய்யும் எல்லோரிடம் இருந்தும் வரி அறவிடப்படுகின்றது உதாரணமாக 500 டொலர்கள் சம்பளம் பெறும் ஒருவர் 150 டொலர்களை வரியாகச் செலுத்தி 350 டொலர்களை சம்பளமாகப் பெறுகிறார்.

சம்பளப் பணத்தில மட்டும் தான் வரி அறவிடுகின்றார்கள் என்று நினைத்து விடாதீர்கள். பொருள்கள் வாங்கும் போதும் கூட வரி அறவிடுகின்றார்கள். இரண்டு டொலருக்கு ஒரு பொருளை வாங்கினால் இரண்டு டொலருடன் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையையும் சேர்த்து வரியாகக் கொடுக்க வேண்டும்.

கனடிய அரசு வரியாக அறவிடும் பணததைக் கொண்டு மக்களுக்குச் சிறபபான சேவையைச் செய்து வருகின்றது. எல்லோருக்கும் மின்சாரம் இலவசமாகக் கிடைக்கிறது வைத்திய சிகிச்சை இலவசமாகக் கிடைக்கிறது.

கனடா ஒரு குடியேற்றநாடு இதனால் இந்த நாட்டை இட்டு முன்னேற்றுகின்றார்கள்

# இங்கே இப்படி இருந்தவர் அங்கே எப்படி இருக்கிறார்?

இங்கு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து புகழ் பெற்றவர்கள் கனடாவில் வட்டிக்கடை நடத்துகிறார்கள். இங்கு பட்டப் பின்படிப்பை மேற்கொண்டு குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து வேலை செய்தவர்கள் அங்கு காவலாளிகளாகக் கடமையாற்றுகின்றார்கள். இங்குபிரபல கல்லூரி ஒன்றின் அதிபராக இருந்தவர் அங்கு பெற்றோல் செட்டில் வேலைசெய்கிறார்.

நன்றி: உதயன்



படிப்பகம்

www.padippakam.com


இதோ தமிழ் மனம் கவரும் இனிய ஸ்தாபனம்

# மாசே ரிங்கோ

- உங்களுக்குத் தேவையான
- சகலவிதமான அன்றாட பாவனைப் பொருட்கள்.
- இலங்கை இந்திய ஈனடிய உணவுப் பொருட்கள்
- கோவில், சமயப் பண்டிகைகள், திருமணம் மற்றும் முக்கிய நிகழ்ச்சி எதுவானாலும் வேண்டிய மங்களப் பொருட்கள்
- ஒலிப் பதிவு நாடாக்கள், இசைத் தட்டுக்கள்

அனைத்திற்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

# MARCHE TRINCO

7103 Drolet, Montreal
Canada • H2S 1TA

Tel: 271-4077




படிப்பகம்

www.padippakam.com

# MADINA SUPER MARKET

# மதீனா சூப்பர்மாக்கெற்

17, ONTARIO ST. EAST, (NEAR ST. LAWRENT BLVD)
TEL: 849-0549 / 849-0009

WE CHANGE
PAL
SYSTEM TO
NTSC.
- AND -
NTSC TO
PAL
SYSTEM.

- பல வருடங்களாக இலங்கை இந்திய மக்களின் மனம் கவர்ந்த ஸ்தாபனம்
- இலங்கை, இந்திய கனடிய உணவுப் பொருட்கள் வரிசையில் முதலிடம்
- புதிய பழைய திரைப்பட வீடியோ கசெட், இசை நாடாக்கள்
- மொன்றியல் நகர மத்தியில் சென்லோறன்ஸ் மெற்றோவுக்கு மிக அண்மையில்

மதீனா சூப்பர்மாக்கெற்



படிப்பகம்

www.padippakam.com

# அன்பின் அழைப்பு

- கனடா வாழ் தமிழ் மக்களே...
இதோ விடுதலையின் கூட்டத்திற்கு
அழைக்கிறோம்....

- பிரதி ஞாயிறு தோறும்
மாலை 4.00 மணிக்கு...

- புதுவாழ்வின் ஐக்கியம்

MONTROYAL BAPTIST
ஆலயத்தில்.....

1012 St. Clar Road T.M.R.
off Côte-des-Neiges and Jean-Talon
Métro Namur, or Jean-Talon, or Guy,
Bus #92 or #165
New Life Fellowship c/o (New Canadian Baptist Church)



படிப்பகம்

www.padippakam.com

# தேசம் எழுதும்....

நான் ஒரு விடுதலைக் கவிஞன் அல்ல
என் பாடல் என் தேசத்தை
உலுக்கியது கிடையாது...
நான் ஒரு போராளி அல்ல...
மறந்தும் என் கைகள் துவக்கிற்காய்
மன்றாடியது கிடையாது...
இரத்தஆற்றில் என்மண் நனைகிறது....
அதில் என்னுடையது ஒரு துளியும் இல்லை
கலைக்கும் ஆமியைக் கண்டு....
கால் தெறிக்க ஓடியவன்....
உயிருக்குப் பயந்து...
ஊரை விட்டே ஓடியவன்....
அலைக்கும் கடலில் என்மண்ணின்
அவலம்... அதையெல்லாம் கடந்து
இனிக்கும் கனடாவில் என் பவனி
இப்பொழுது நடக்கிறது....
உயிர்ப்பயம் இன்றி உலா வருகிறேன்
எனினும் ஈழப்போர்
எனக்கு முக்கியம்.... ஏன்..?

தியாகிகள்

ஈழ மன்னனின் தேசமக்கள்
இரத்தக் குளிப்பில் இருப்பது காட்டி
பூக்கள் மலராப் பொழுதுகள் இருக்க
பிணங்கள் மலரும் பொழுதுகள் சொல்லி
ஈக்களும் நாய்களும் பேய்களும்
இணைந்து உலா வரும் - என்
ஈழத் தெருவை வரைபடமாக்கி
இனத்துக்காக என்னும் பெயரில்
இனத்தை முடிக்கும் துவக்குகள் கீறி
ஈழப் போரை எனக்காய்க் காட்டி
கனடா நாட்டில் வாழத் தகுதி கேட்கும்
வண்ணனுறு தமிழனப்பா நான்...

இன்னும் எனக்குப் பிரச்சினைகள்
ஏராளம்...
நீளும் குடுமி தன்னை வெட்டாதே
என்கிறது...
காது தன்பாட்டில் கடுக்கன்
பார்க்கிறது...
கால் நடந்து களைத்துப் போய்
கார் தேடுகிறது...
கார் தேடும்படலம் காருக்கு
நீரும் தேடுகிறது...

தமிழ்ப்பிரியா

www.padippakam.com



கோழி, நண்டு, மாடு
குளிருக்கு வா... வா.. என்கிறது...
சாப்பாடு தனக்கு முதல்...
'தண்ணி போடச் சொல்கிறது...
மூக்கு தன்னை அறுக்க
முடிவாகச் சொல்கிறது....
எதிர்த்தரப்புக் காரனுக்கு
இது சகுனம் என்கிறது...
தலை எங்காவது இழு... போ...
பதவி.. பெரிது.. பெரிது என்கிறது
கோழைகள் போடு...கிடைத்த இடத்தில்
வேஷத்தை தொடர் விடாதே என்கிறது
ஆசை.. அது.. அளவு கடந்துபோய்
காசு... காசு என்கிறது....
செருக்களம் எதற்கு..?
சீட்டுக்களம் செல் என்கிறது...
வீடு வாங்கு பின் வில் என்கிறது...
வேதம் புதிதாய் விளக்கம் தருகிறது...
"...விடாதே பிடி...
பிடித்தால் பிடி....
அடித்தால் அடி....
முடித்தால் முடி...
கடித்தாலும் கடி..."



படிப்பகம்

www.padippakam.com

# கவிதையில் இருந்து..

ஆமாம் உபதேசம் கேட்ட
அர்ச்சுனர்கள் கனடாவில்
இடம்மாறலின்றி எல்லோரும்
குழுக்களாய்...
தேவாரம் பாட சண்டைத்
திருவிழாக்கள் நடக்கிறது....
இதற்குள்....
ஏனோ எனக்கு அழைப்பினை
இயம்பினீர்....
இது பிழை என்கிறேன்....
தலைப்போ என்னை....
மலைக்க வைக்கிறது.... ஆம்
"தேசம் எழுதும் தியாகிகள்..." பற்றி
பேசும் தகுதிகள் இல்லாதவன் நான்...
எனினும்..
என் மண்ணின் மைந்தரை...
தன்னைக் கொடுத்து...தன் உயிரைக் கொடுத்து
தமிழாள் கூந்தலில் பூவைச் சூடும்
இந்தப் புனிதரை.... என்
மண்ணும் கடலும் வானும்.. சுவாசித்த
இந்த மறத்தமிழர்கள் மூச்சை...
சொல்லும் ஒவ்வொரு வேளையும்
என் பாவம் தீர்க்கிறேன் தேசமே.!

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# MARCHE VICTORIA ORIENTAL INC.

## TWO LOCATIONS

MONTREAL
6324 VICTORIA STREET
PLAMONDON
TEL.: (514) 737-4715
OPEN 7 DAYS

WEST ISLAND
4755 BLVD DES SOURCES
PIERREFONDS,
TEL.: (514) 685-3260
OPEN 6 DAYS (MONDAY CLOSED)
FREE PARKING

| | |
|---|---|
| 20 Kg கோதுமை மா (Five Rose)........................ | 13.49 |
| தாவர எண்ணெய் (மரீனா பெரியது) .................... | 15.49 |
| மல்லித்தூள் 1K.g.................................................. | 3.49 |
| கோர்லிக்ஸ் ........................................................... | 2.99 |
| புழுங்கல் அரிசி 10 K.g........................................ | 6.99 |
| புளியம் பழம் ........................................................ | .99 |
| மிளகாய்த் தூள் 1K.g............................................ | 4.49 |
| சானாப் பருப்பு (Chana Dal).................................. | 2.89 |
| மைசூர் பருப்பு 2 K.g.............................................. | 2.99 |

அத்தோடு இந்திய இலங்கை காய்கறி வகைகள் பழவகைகள் மிக மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். தமிழ் வீடியோப் படங்கள் 49 சதம் மட்டுமே. (24 மணித்தியாலம் மட்டும்)

# மாசே விக்டோரியா

## MARCHE VICTORIA ORIENTAL INC.

C 1966

www.padippakam.com

# ஒரு மனிதனும் எங்கள் தேசமும்...

செழியன்

மறுநாள் காலை விடிந்தது. தலைமன்னார் கடற்பரப்பில் சூரியன் கதிர்களை பதித்தான். விடிந்து வெகு நேரமாகியும் கூட கைதிகளாய் கடற்படைமுகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு காலைக் கடன்களுக்கும் அனுமதியளிக்கப்படவில்லை.

நான்கு உயரமான சுவர்கள். சுவர்களிடையே ஒரு கனமான இரும்புக் கம்பிகளாலான கதவு. அந்த கம்பிகள் வழியாக மட்டும் இலேசான எட்டிப்பார்க்கும் மெல்லிய வெளிச்சம்: காற்று வருவதற்கே அஞ்சிவிட்டது. அடிக்கடி அந்த கம்பிகள் வழி யாக பல ஆயுதப்படையைச் சேர்ந்தவர்கள் பார்த்து விட்டு சிங்களத்தில் பேசிக்கொண்டு சென்றனர். செய்தி மெல்ல அந்த சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடந்தவர்களிடையே பரவியது.

"பிடிபட்டு இருக்கிறவர்களில இரண்டு இயக்கப் பெடியளும் இருக்கினமாம்.".

தொடர்கதை 8

படிப்பகம்

www.padippakam.com

"படகிலே வந்தவர்களை விடுதலை செய்ய வேண்டாம் என யாழ்ப்பாணத்தில் இருந்து செய்தி வந்திருக்குதாம்."

இந்த செய்திகளைப் பற்றி கதிரேசனும் ரமணியும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இது கீழ் மட்டத்து கடற்படை வீரர்களின் கற்பனை என கூறி ஆரணியும் சிவகாமியும் சமாதானப்படுத்திவிட்டனர்.

வெகுநேரத்தின்பின் காலைக் கடன்களுக்காக இரும்புக் கதவு திறக்கப்பட்டது. முதலில் பெண்களை அனுமதித்தனர். சற்று நேரம்தான். வெளியே சென்ற ஒரு பெண் அலறி அடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். மேலாடை கிழிந்து கண்ணீருடன் வந்து சேர்ந்தவளை பார்த்தபோது இது வெறி கொண்டு அலையும் மிருகங்களின் பலாத்காரமுயற்சி என தெரிய வந்தது. ஆத்திரம் வந்தது. ஆத்திரப்படுவதால் அங்கு பயன் எதுவும் நிகழப்போவதில்லை. ஏனைய பெண்களும் திரும்பியபோது வெளியில் நின்று கொண்டிருக்கும் கடற்படை காடையர்களின் அருவெறுப்பான கைகளைப் பற்றியும் பெண்களைப் பற்றி அவரது எண்ணங்களை வெளிப்படுத்தும் அசிங்கமான கண்களைப் பற்றியும் இவற்றுக்கும் மேலாக அவர்களது உள்ளத்தில் தேங்கி கிடக்கும் கேவலமான எண்ணங்களைப் பற்றியும் தெரியவந்தது.

நீண்டநேரமாய் ஆரணி ரமணியுடன் எதுவும் பேசவில்லை. ஆரணியின் மனதில் கடுமையான சிந்தனைகளின் போராட்டம் நடைபெறுவது தெரிந்தது. ரமணியும் அமைதியாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தான். ரமணி தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்த ஆரணி ரமணியின் மார்பில் சாய்ந்து கொண்டாள். சாய்ந்து கொண்டவள் எதுவும் பேசவில்லை. அவள் மௌனமாக விம்மி அழுது கொண்டிருந்தாள். அழுவதைவிட அவளுக்குவேறு வழி தெரியவில்லை. அவளைச் சமாதானப்படுத்த ரமணிக்கு முடியவில்லை.

"இங்கு இருந் தால் அந்த நாய்கள் என்னையும் கிழித்து குதறிவிடும்" ஆரணி அழுதாள். வெகுநேரம் அழுது கொண் டிருந்தாள்.

மதியம் கடந்த போது அதிகாரிகள் சிலர் வந்தனர். கதவுகள் மறுபடியும் திறந்து கொண்டன.

"எல்லோரையும் விசாரணைக்கு யாழ்ப்பாணம் கொண்டுவரச் சொல்லி உத்தரவு. இப்போதே கொண்டு செல்லப் போகிறோம்" – ஒரு அதிகாரி சிங்களத்தில் கூற மற்றொருவர் தமிழில் மொழி பெயர்த்தார். தெளிவான தமிழ் என்றாலும் அவர் தமிழர் அல்ல. என்பது தெரிந்தது.

மறுபடியும் அவர்கள் வந்த படகில் ஏற்றப்பட்டனர். காவலாக இரண்டு கடற்படை வீரர்கள் இயந்திரத்துப்பாக்கிகளுடன் ஏறிக்கொண்டனர். இவர்களிற்கு முன்பாக சிறுகடற்படை படகு வழிகாட்டிச் செல்ல இவர்களது பயணம் மறுபடி தொடர்ந்தது.

ரமணியும் கதிரேசனும் தெளிவாகப் புரிந்து கொண்டனர். யாழ்ப்பாணம் தாம் கொண்டு செல்லப்பட்டால் நிச்சயமாக



படிப்பகம்

தாம்யார் என்பது உடனேயே தெரியவந்துவிடும். அங்கு ஏற்கனவே இருவரது புகைப்படம், விலாசம் என்பன இருக்கிறதையும் நினைவு படுத்திக் கொண்டனர். தாம் யார் என்பதை ஆயுதப்படையினர் அறிந்து விட்டால் அடுத்து நடைபெறப் போகும் சித்திரவதைகள் தமக்கு மட்டுமல்ல தமது மனைவி மாருக்கும் தான் என்பதும் உண்மை.

என்ன செய்வது ?

சிந்தனை, சிந்தனை.

மூளை வேகமாய் இயங்கியது. கடைசிக் கட்டம். இதில் தப்ப வேண்டும். இல்லையேல் செத்துப்போய் விட வேண்டும். உயிரோடு யாழ்ப்பாணம் செல்வது ஆபத்து. ஆபத்து எமக்கு மட்டுமல்ல எம்மைச் சேர்ந்தவர்களுக்கு அனைவருக்கும். சித்திரவதையின் கொடுமையால் உண்மைகளை காப்பதற்கு உத்தரவாதமில்லை.

என்ன செய்வது?

வேகமாக முடிவு எடு என மூளையை தட்டிக்கொண்டான் ரமணி. அதிக அவகாசம் இல்லை. அவசரம் மிக அவசரம்.

கதிரேசன் ரமணியின் அருகில் நின்று கொண்டிருந்தான். இவர்களுக்கு அருகில் ஒரு கடற்படை வீரன். ஆரணி படகின் மறுபுறம் இருந்தான். அவன் இருந்த இடத்துக்கு பக்கமாக மற்ற கடற்படைவீரன் இருந்தான். ரமணி முடிவு எடுத்து விட்டான். கடைசிமுயற்சி மரணம் அல்லது விடுதலை.

www.padippakam.com

இரண்டுமே நன்மையே. கதிரேசனின் முகத்தை நோக்கினான். ரமணியின் முடிவைப் பார்த்துக் கொண்டு அவன் மனம் அடித்துக் கொண்டிருந்தது.

ரமணி கதிரேசனை அர்த்த புஷ்டியுடன் நோக்கினான். கதிரேசன் ஒன்றும் புரியாமல் விழித்தான். கதிரேசனுக்கு அருகில் இருந்த கடற்படை வீரனை கண்சைகையால் காட்டி "இவன் உனக்கு" என கிசுகிசுத்தான்.

கதிரேசன் புரிந்து கொண்டான். புதிய உற்சாகம்! நான்தயார் என்பதுபோல் தெளிந்த முகத்துடன் புன்முறுவல் ஒன்று பூத்து கண் சிமிட்டினான்.

மற்றவனை நான் பார்த்துக் கொள்கிறேன். ஜாடையாலேயே ரமணி கூறினான். இரண்டு கடற்படை வீரர்களையும் ஒரே நேரத்தில் தாக்க வேண்டும். எப்படி படகின் மறுபுறம் செல்வது. ரமணி செல்ல இந்த கடற்படை வீரன் அனுமதிப்பானா? தடுத்துவிட்டால் திட்டமே பாழ். எச்சரிக்கை. மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படு. ஆரணிக்கு பக்கமாக இருந்த கடற்படைவீரனை பார்த்தான். ஆரணியைப் பார்த்தான். அவர்களை நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்தான்.

"ஏய் எங்கடா போற"... ஆத்திரத்துடன் துப்பாக்கியை நீட்டினான் கற்படை வீரன்.

"சேர் என்னுடைய மனைவிக்கு தலைசுற்றுகிறதாம் அதுதான் பக்கத்தில போய் இருக்கப்போறன்.



படிப்பகம்

www.padippakam.com

கடற்படை வீரன் ரமணியைப் பார்த்தான். ஆரணியைப் பார்த்தான்.

"சரி போ"...

வெற்றி. திட்டத்துக்கு முதல் வெற்றி.

ஆரணிக்கு பக்கமாக ரமணி சென்று இருந்தான். இனி அடுத்த நடவடிக்கை ரமணியின் மனத் துடித்தது. கதிரேசனை நோக்கினான். அவனும் தயார். இனி என்ன செயலில் இறங்கவேண்டியது தான்.

ரமணி கதிரேசனைப் பார்த்து கண்ணடித்தான். அவ்வளவுதான் இருவரும் ஒரே நேரத்தில் எழுந்து கடற்படை வீரர்களை நோக்கிப் பாய்ந்தனர். கடற்படை வீரர்களை திடீரென தாக்கி அவர்களின் கையில் உள்ள இயந்திர துப்பாக்கிகளை பறித்தெடுப்பதே அவர்களின் திட்டம்.

- அடுத்த இதழில் முடியும் -

---

எழுத்து இதயங்களே, கதை, கட்டுரை கவிதை, விமர்சனம், அரசியல் கண்ணோட்டம் எதுவானாலும் அனுப்பி வைக்கலாம். ஏற்கெனவே அச்சில் வெளிவந்த இன்றைய சமூகப் பிரச்சினைகள் - ஆய்வுகள் எதுவானாலும் தரமெனக் கருதுபவை தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

- நன்றி -

---



படிப்பகம்

www.padippakam.com



h the best Compliments from இந்து இவர்களது அன்பளிப்பு

# கணேசா

# GANESHA

7244 St. HUBERT
TEL: 273-3589



படிப்பகம்

www.padippakam.com

1975 ம் ஆண்டு முதல் 14வருட சேவையில் உயர்ந்து நிற்பவர்

# முகேஸ் ஜுவலர்

620 CATCHCART ST SUITE 320

861-3110

தரமிகுந்த இந்திய இலங்கை தங்க நகைகளுக்கும் நங்கையர் நாடும் நவ நாகரீக தங்க வைர வெள்ளி ஆபரணங்களுக்கும் இரத்தினக் கல்பதித்த நகைகளுக்கும் நம்பகரமான ஒரே ஸ்தாபனம். இலங்கை நகைகள் போன்ற அழகிலும் தோற்றத்திலும், ஜொலிப்பிலும் நகைகள் செய்து கொடுக்கப்படும். தாலி, நெக்கிளஸ், அட்டியல் போன்ற சகலவிதமான ஆபரணங்களுக்கும் உங்கள் விருப்பத்திற்கேற்ப உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

22கரட் நகைகள் உத்தரவாதத்துடன் வழங்கப்படும்

உங்கட் தேவைக்கேற்ப ஆபரணங்கள் அழகு பெறத் தயாரிப்பதற்கும் புனர் அமைப்பதிற்கும் இன்றே நாடுங்கள்

## MUKESH JEWELLER

620 CATCHCART ST SUITE 320

TEL: 861-3110